## செப்டம்பர் – 02 – பொதுக்கால 22ம் ஞாயிறு

**“நான் இன்று நேர்மைமிகு சட்டங்களை உங்களுக்குத் தந்துள்ளேன்.” – இச 4: 8**

### முதல் வாசகம் : இணைச்சட்டம் 4 : 1- 2, 6 – 8

இஸ்ரயேலரே! கேளுங்கள் நான் உங்களுக்குக் கற்றுத்தரும் நியமங்கள் முறைமைகளின்படி ஒழுகுங்கள். அதனால் நீங்கள் வாழ்ந்து, உங்கள் மூதாதையரின் கடவுளாகிய ஆண்டவர் உங்களுக்குக் கொடுக்கும் நாட்டுக்குச் சென்று அதை உரிமை யாக்குவீர்கள். நான் உங்களுக்குக் கட்டளையிட்டுச் சொல்பவற்றோடு எதையும் சேர்க்கவும் வேண்டாம். அதிலிருந்து எதையும் நீக்கவும் வேண்டாம். உங்கள் கடவுளாகிய ஆண்டவரின் கட்டளைகளை நான் உங்களுக்குக் கற்றுத்தருகிறேன் அவற்றைப் பின்பற்றுங்கள். நீங்கள் அவற்றைப் பின்பற்றி நடங்கள். அதுவே மக்களினங்கள் முன்னிலையில் உங்கள் ஞானமும் அறிவாற்ற லுமாய் விளங்கும். இந்த நியமங்களைக் கேள்வியுறும் அனைவரும், உண்மையில் இப்பேரினம் ஞானமும் அறிவாற்றலும் கொண்ட மக்களால் ஆனது என்பர். நாம் குரல் எழுப்பும் போதெல்லாம் நம் கடவுளாகிய ஆண்டவர் நம்மோடு உள்ளார். அவரைப்போல், மக்களுக்கு மிகவும் நெருங்கிய கடவுளைக் கொண்ட வேறு பேரினம் ஏதாகிலும் உண்டா? நான் இன்று நேர்மைமிகு சட்டங்களை உங்களுக்குத் தந்துள்ளேன். இவற்றைப் போன்ற நியமங்களையும் முறைமைகளையும் கொண்ட வேறுபேரினம் ஏதாகிலும் உண்டா?

**பதில்பாடல் :** ஆண்டவரே உம் கூடாரத்தில் தங்கிடத்
தகுதியுள்ளவர் யார்?

### இரண்டாம் வாசகம் : யாக்கோபு 1:17 –18, 21–22,27

சகோதர சகோதரிகளே! நல்லகொடைகள் அனைத்தும், நிறைவான வரமெல்லாம், ஒளியின் பிறப்பிடமான விண்ணகத் தந்தை யிடமிருந்தே வருகின்றன. அவரிடம் எவ்வகையான மாற்றமும் இல்லை. அவர் மாறிக்கொண்டிருக்கும் நிழல் அல்ல. தம் படைப்புகளுள் நாம் முதற்கனிகளாகும்படி உண்மையை அறிவிக்கும் வார்த்தையால் நம்மை ஈன்றெடுக்க அவர் விரும்பினார். எனவே எல்லா வகையான அழுக்கையும், உங்களிடம் மிகுந்துள்ள தீமையையும் அகற்றி, உங்கள் உள்ளத்தில் ஊன்றப்பட்ட வார்த்தையைப் பணிவோடு ஏற்றுக் கொள்ளுங்கள். அதுவே உங்களை மீட்க வல்லது. இறைவார்த் தையைக் கேட்கிறவர்களாக மட்டும் இருந்து உங்களை ஏமாற்றிக்கொள்ள வேண்டாம். அதன்படி நடக்கிறவர்களாயும் இருங்கள். தந்தையாம் கடவுளின் பார்வையில் தூய்மையானதும் மாசற்றதுமான சமயவாழ்வு எதுவெனில், துன்புறும் அனாதைகளையும் கைம்பெண்களையும் கவனித்தலும் உலகத்தால் கறைபடாதபடி தம்மைக் காத்துக்கொள்வதும் ஆகும்.

### நற்செய்தி : மாற்கு 7: 1-8, 14 – 15, 21 - 23

ஒருநாள் பரிசேயரும் எருசலேமிலிருந்து வந்திருந்த மறைநூல் அறிஞர் சிலரும் இயேசுவிடம் வந்து கூடினர். அவருடைய சீடருள் சிலர் தீட்டான, அதாவது, கழுவாத கைகளால் உண்பதை அவர்கள் கண்டார்கள். பரிசேயரும், ஏன் யூதர் அனைவருமே, தம் மூதாதையர் மரபைப் பின்பற்றிக் கைகளை முறைப்படி கழுவாமல் உண்பதில்லை. சந்தையிலிருந்து வாங்கியவற்றைக் கழுவிய பின்னரே உண்பர். அவ்வாறே கிண்ணங்கள், பரணிகள், செம்புகள் ஆகியவற்றைக் கழுவுதல் போன்று அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய மரபுகள் இன்னும் பல இருந்தன. ஆகவே பரிசேயரும் மறைநூல் அறிஞரும் அவரை நோக்கி, ”உம் சீடர் மூதாதையர் மரபுப்படி நடவாமல் தீட்டான கைகளால் உணவு அருந்துவதேன்?” என்று கேட்டனர். அதற்கு அவர், ”வெளிவேடக்காரர்களாகிய உங்களைப்பற்றி எசாயா பொருத்தமாக இறைவாக்கு உரைத் திருக்கிறார். ”இம்மக்கள் உதட்டினால் என்னைப் போற்றுகின்றனர் இவர்கள் உள்ளமோ என்னைவிட்டு வெகுதொலையில் இருக்கிறது. மனிதக் கட்டளைகளைக் கோட்பாடுகளாகக் கற்பிக்கின்றனர். இவர்கள் என்னை வழிபடுவது வீண்” என்று அவர் எழுதியுள்ளார். நீங்கள் கடவுளின் கட்டளைகளைக் கைவிட்டு மனித மரபைப் பின்பற்றி வருகிறவர்கள்” என்று அவர்களிடம் கூறினார். இயேசு மக்கள் கூட்டத்தை மீண்டும் தம்மிடம் வரவழைத்து, அவர்களை நோக்கி, ”நான் சொல்வதை அனைவரும் கேட்டுப் புரிந்து கொள்ளுங்கள். வெளியேயிருந்து மனிதருக்குள்ளே சென்று அவர்களைத் தீட்டுப்படுத்தக் கூடியது ஒன்றுமில்லை. மனிதருக்கு உள்ளேயிருந்து வெளியே வருபவையே அவர்களைத் தீட்டுப் படுத்தும். ஏனெனில் மனித உள்ளத்திலிருந்தே பரத்தைமை, களவு, கொலை, விபசாரம், பேராசை, தீச்செயல், வஞ்சகம், காமவெறி, பொறாமை, பழிப்புரை, செருக்கு, மதிகேடு ஆகியவற்றைச் செய்யத் தூண்டும் தீய எண்ணங்கள் வெளி வருகின்றன. தீயனவாகிய இவை அனைத்தும் உள்ளத்திலிருந்து வந்து மனிதரைத் தீட்டுப் படுத்துகின்றன” என்றார்.

**தியானம்:** இயேசுவின் திருப்பெயரால் திருமுழுக்குப்பெற்ற கத்தோலிக்கரான எமது வாழ்வு எல்லாம் வல்ல இறைவனுக்கு ஏற்றதாகவும், நமது பணிகள் இறைசமூகத்திற்கு பலன் தருவதாக அமையவேண்டும் என்பதனை நற்செய்தி தெளிவுபடுத்தி, எமது இறைப்பற்று மேலோட்டமாக இல்லாமல், உண்மையானதாக, பொருள் நிறைந்ததாக அமைய அழைக்கிறது. ஒழுக்கத்தைவிட சம்பிரதாயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதனை நற்செய்தியில் நாமவதானித்தாலும், ஆண்டவர் இயேசுவுடைய காலத்துப் பரிசேயர்கள் மற்றும் மறைநூல் அறிஞர்களுக்கு மட்டுமல்ல, இன்றும் எம்மிடையே வாழும் ஒருசிலருக்கும் அவர்களது வாழ்வின் ஒழுக்கத்தைவிட ஒருசில சம்பிரதாயங்களே முக்கியமெனக்கருதி அதை நுண்ணியமாகக் கடைப்பிடிப்பதில் தங்களது நேரத்தைச் செலவழித்து அதற்காக தங்கள் உயிரைக் கொடுப்பதற்கும் தயாராக இருக்கின்றனர். வழிபாடுகள் என்ற பெயரில் தாம் செய்வதனை பெரிதுபடுத்தி விளம்பரப் படுத்துவதற்கும், புனிதர்களது பெயரால் நேர்த்தி செய்வதற்கும் பெருந்தொகைப் பணத்தைச் செலவழிக்கின்ற நாம், ஏழைகள், எளியவர்கள் வாழ்வுபெற பத்துக்காசு கொடுப்பதில்லை. இதுதான் அன்றைய பரிசேயர்களின் ஆன்மீகம் எனப்பட்டது. இவ்வாறான ஆன்மீகத்தினை நாம் பின்பற்றக்கூடாது. இதனையே “இம்மக்கள் உதட்டினால் என்னைப் போற்றுகின்றனர். இவர்கள் உள்ளமோ என்னைவிட்டு வெகுதொலைவில் இருக்கிறது. இவர்கள் என்னை வழிபடுவது வீண்’’ என்று எசாயா இறைவாக்கினரை மேற்கோள்காட்டி ஆண்டவர் இயேசு அன்றைய மறைநூல் அறிஞர்களைப்போல வாழும் எம்மை நோக்கிக் கூறுகிறார். நம்முடைய வழிபாடு, மற்றும் இறைப்பற்று என்பவற்றை நாம் ஆய்வு செய்தால், எமது வழிபாடுகளது பெயரால் நாம் இறைவனை வழிபடுவது மேலோட்டமாக அமைந்திருப்பதனை நன்கறியமுடியும். ஆண்டவர் இயேசுவின் காலத்துப் பரிசேயர்கள் மற்றும் அவர்களின் முன்னோரான இஸ்ரயேல் மக்களில் பலரும் அப்படித்தான் நடந்துகொண்டனர். எனவேதான், எசாயா இறைவாக்கினர் வழியாக இறைவன் அவர்களை எச்சரித்தார். மீண்டும் ஆண்டவர் இயேசு வழியாக இந்த அறைகூவலை நமக்குத் தருகிறார். இறைவனை உண்மையிலும், ஆவியிலும் வழிபடவேண்டும் என்று மொழிந்த இயேசு எங்கள் வழிபாடும், வாழ்வும் முரண்பாடற்றதாக அமைய அருள் தந்திடவும், நாங்கள். உதட்டினால், அவரைப் புகழ்ந்தாலும், எமது உள்ளத்தால் ஆண்டவர் இயேசுவை விட்டு விலகி வாழாதபடி எங்களைக் காத்துக்கொள்ள அருள்வேண்டுவோம்.